செ.வெ.எண் : 38

நாள் : 19.07.2017

ந.க.எல்1.எண்: 9392/2017

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
உதகமண்டலம்.
நாள்: 18.07.2017

**பத்திரிகைச்செய்தி**

தகுதி வாய்ந்த வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் அதிகளவில் சேர்த்தல் மற்றும் பிழைகளை நீக்கும் பொருட்டு இவ்வாண்டு ஜுலை மாதம் 1-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை சிறப்புப்பணி நடத்த இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்தச் சிறப்புப்பணியை அனைத்து மாநிலங்களிலும் தொடங்கி, " எந்த ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது" என்ற இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கருப்பொருளுக்கிணங்க அதிகளவில் இளைய வாக்களர்களை, குறிப்பாக 18 – 21 வயதுக் குழுமத்தைச் சேர்ந்த வாக்காளர்களை பட்டியலில் சேர்க்க, தற்போது நடைபெறும் தொடர் திருத்தக் காலத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இச்சிறப்புப்பணியின்போது வாக்காளர் பதிவு அதிகாரிகளின் அலுவலகங்களில் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம். அஞ்சல் மூலமும் படிவங்களை அனுப்பலாம். www.elections.tn.gov.in என்ற இணையதளம் மூலமும், இ-சேவை மையங்களின் மூலமும் இணையவழியில் விண்ணப்பிக்கலாம்.

23.07.2017 அன்று வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. இச்சிறப்பு முகாம் நடைபெறும் நாளில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் அமர்ந்து நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை பெறுவார்கள்.

மேலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் 23-7-2017 நாளில் அனைத்து வட்டாட்சியர், நகராட்சி ஆணையர் அலுவலகங்களில் மாற்றுதிறனாளிகளுக்கென 2(இரண்டு) அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு படிவங்களை பூர்த்தி செய்து பெற்றிட சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சிறப்புப்பணியின் போது இறந்த வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கும் பணியும் நடைபெறவுள்ளது. இறப்பு பதிவு செய்யப்பட்ட விவரங்கள் உள்ளாட்சி அலுவலகங்களிலிருந்து பெறப்பட்டு அதன் அடிப்படையில் இறந்த வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியல்களிலிருந்து நீக்கப்படும்.

பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பினை நன்கு பயன்படுத்தி கொள்ளுமாறு நீலகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

[redacted]

[redacted]

[redacted]